# திருக்கல்யாணத் தாய்

**www. thirukalyanamatha.com** தொலைபேசி : 04639 ! 261230

**kalyanamatha@gmail.com**

ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு **பபியான் ஜோசப்**

ஆலோசகர் குழு
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. மைக்கிள்
திருத்தொண்டர்.டேவிட் வளன்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230

தொடர்பு முகவரி
திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 ! 261230


## மலரின் உள்ளே...


வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத்தாய் இதழின் ஆர்வமிக்க வாசகர்கள் அனைவருக்கும் என் மனம் கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்

இந்த மாத இதழ் நமது திருக்கல்யாணத்தாயின் விண்ணேற்பு விழா சிறப்பிதழாக வெளிவருகிறது. உலகையெல்லாம் படைத்துக் காக்க இறைவனை தம் வயிற்றில் தாங்கி விண்ணுலகையே இம்மண்ணுலகிற்கு கொண்டு வந்த உத்தமி நம் திருக்கல்யாணத் தாய். நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழப்படும் என்று கூறி இறைவனின் மீட்பு பணியை துவங்கி வைத்தவர் நம் திருக்கல்யாணத் தாய். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும் என்ற சிமியோனின் வாக்கிற்கிணங்கி தமது வாழ்வு முழுவதையும் இறைவனுக்கு அர்ப்பணித்து தியாகம் செய்தவர் நம் திருக்கல்யாணத் தாய். கல்வாரி சிலுவை வரை உடன் சென்று இறைவனின் மீட்பு பணியை நிறைவேற்றி வைத்தார்.

விண்ணேற்படைந்த நம் திருக்கல்யாணத்தாய் இறைவனின் அருகில் வீற்றிருந்து நமக்காக தம் மகனிடம் வேண்டுதல்செய்கிறார். நம் இதய தாகங்களை அன்னையின் பாதங்களில் இறக்கி வைப்போம். திருமண வரம், குழந்தைவரம், தொழில் முன்னேற்றம், கல்விச் செல்வம், நல்ல உடல் நலம், ஆகிய எலலா வரங்களையும் பெற்றுக் கொள்வோம். நன்றி நிறைந்த உள்ளத்தோடு திருக்கல்யாண அன்னையின் ஆலயம் வருவோம். நிறைவான ஆசிகளுடன் இல்லம் சென்று செழித்து வாழ்வோம் இம்மாதத்திலே நம் இந்திய திருநாட்டின் விடுதலைப் பெருவிழாவினையும் நாம் பெற்றிருப்பது அன்னையோடு இந்திய திருநாட்டிற்குரிய பெறும் தொடர்பினை எடுத்துக் காட்டுகிறது. எனவே இந்தியர்களாகிய நாம் அனைவரும் தெய்வ பக்தியேடு, தேசப்பற்றையும் வளர்த்து நிறைவாழ்வு வாழ்வோம். நம் திருக்கல்யாண அன்னையின் ஆசி உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

திருத்தல அதிபர்

பொத்தக்காலன்விளை.

# உலகத் திருச்சபை

## உண்மையான விடுதலை.....



இறைவனுக்கு நம் இதயங்களை திறந்து அவருக்கு அடிமையாவதிலேயே உண்மையான விடுதலை கிட்டுகிறது எனவும், இறைவனுக்கு அடிமையாக இருப்பது ஒரு புதுவிதமான சுதந்திரம், இது உலகைச் சார்ந்த சுதந்திரம் அல்ல எனவும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். மேலும் நம் இதயங்களை திறந்து தூய ஆவியானவரின் செயல்பாடுகளை அனுமதிப்பதன் மூலமே இறைவனின் புதிய கட்டளையை நாம் புரிந்து கொள்ளமுடியும் என்றும், நம் மனங்களை மாற்றுவதற்கு நாம் தூய ஆவியானவரை அனுமதிக்கவில்லை எனில் அது வெளிவேடமாகும் எனவும், நமக்கு மீட்பு தேவையென்பதை அறிந்துள்ள போதிலும் நாம் அதற்காக நம் இதயங்களை தூய ஆவியாருக்குத் திறக்க அஞ்சுகிறோம். ஏனெனில் இறை கட்டுப்பாட்டை அல்ல; நம்மையே நாம் ஆள விரும்புகிறோம் என்பதே இந்த மீட்புக்குத் தடையாக உள்ளது எனவும் திருத் தந்தை கூறியுள்ளார்.

## நமக்கு எழுந்துள்ள சோதனை...

பாதுகாப்பு கருதி, மாற்றங்களுக்குப் பயந்து முன்னோக்கிச் செல்வதற்குத் தயங்குவதோ அல்லது வளர் இளம் பருவத்தினரைப் போல் வெகு விரைவாக மாற்றங்கள் நிகழ வேண்டும் என்ற ஆவல் கொள்வதோ கிறிஸ்தவ நம்பிக்கையை வளர்க்காது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார். 1930 களில் வாழ்ந்த ஒரு துறவுச் சபையில் உயர் தலைவர், தன் சபையில் மாற்றங்களை கொணர விழைந்து, பல்வேறு துறவு சபைகளில் பயன்படுத்தப்படும் சட்டங்களைத் திரட்டினார் என்றும், பல ஆண்டுகள் அவர் செய்த இந்தப் பணியின் இறுதியில் அவர் ஒரு துறவியைச் சந்தித்து தன் முயற்சிகள் பற்றி கூறிய போது அவரோ நீங்கள் உங்கள் சபையின் உண்மையான அருள் கொடைகளை கொன்று விட்டீர்கள் என்று சொன்னதையும் திருத்தந்தை எடுத்துக்காட்டாக கூறியுள்ளார்.

## மாற்றுத்திறனாளிகள்

பார்வையற்றவருக்கு இயேசு பார்க்கும் திறனை வழங்கியது இந்த நம்பிக்கை ஆண்டில் அற்புதமாக பொருள் தரும் அடையாளம் என்றும் நம் அனைவருக்கும் நம்பிக்கை ஒளியை வழங்கி, நம்மை வாழ்வின் பாதையில் நடத்தும் ஓர் அடையாளம் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.மேலும் மாற்றுத் திறனாளிகளின் அனைவரையும் மனித குடும்பத்தில் முழுமையாக இணைப்பது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்

–நன்றி : நம்வாழ்வு

# மறை மாவட்ட செய்திகள்



2-07-2013 பத்திநாதபுரம் ஆலய அர்ச்சிப்பு திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று மாலை அடைக்கலாபுரம் புனித ஜோசப் கருணை நிறுவனத்தில் நிர்வாகக் குழு கூட்டம் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

04-07-2012 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை குறுக்குச்சாலை மறை மாவட்ட அளவில் தன்னார்வத்தொண்டு உறுப்பினர்களோடு இணைந்து நம்பிக்கை ஆண்டுக்கான திட்டமிடுதல் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

11-07-2012 காலை செனட் குழு கூட்டமும் அன்று மாலை மறைவட்ட நிர்வாகக் குழு கூட்டமும் மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

12-07-2012 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மணப்பாடு மறை மாவட்ட அளவில் தன்னார்வத்தொண்டு உறுப்பினர்களோடு இணைந்து நம்பிக்கை ஆண்டுக்கான திட்டமிடுதல் கூட்டமும் அன்று மாலை இஞ்ஞாசியார்புரம் பங்குதந்தை புதிய இல்ல அர்ச்சிப்பு திருப்பலியும் மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

16-07-2013 அன்று மாலை நற்செய்தி நடுவகத்தில் வைத்து மாதாந்திர பொது தியானமும் அன்று மாலை நாகலாபுரம் சங்கர்லிங்கபுரத்தில் சமுதாய கூட பங்கு அர்ச்சிப்புத் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

17-07-2013 அன்று வடக்கன்குளம் மறைவட்ட அளவில் தன்னார்வத்தொண்டு உறுப்பினர்களோடு இணைந்து நம்பிக்கை ஆண்டுக்கான திட்டமிடுதல் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

18-07-2013 காலை மறைவட்ட கல்விக்குழு கூட்டமும் அன்று மாலை மறைவட்ட ஆலோசனைக் குழு கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

21, 22-07-2013 ஆகிய இருநாட்களும் செய்துங்கநல்லூர் பங்கு மக்களை ஆயர் அவர்கள் சந்தித்து உரையாடினார்கள்.

2-07-2013 அன்று காலை மறைவட்ட பணிக்குழுக்களின் செயல்களின் கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

24-07-2013 சாத்தான்குளம் மறைவட்ட அளவில் தன்னார்வத்தொண்டு உறுப்பினர்களோடு இணைந்து நம்பிக்கை ஆண்டுக்கான திட்டமிடுதல் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

25-07-2013 அன்று திருவைகுண்டம், புனித சந்தியாகப்பர் ஆலய 75 வது ஆண்டு ஜீபிலி ஆரம்ப திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

26-07-2013 தூத்துக்குடி புனித பனிமயமாதா ஆலய திருவிழா கொடியேற்றத் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நன்றி– **மறைமாவட்ட செய்திகள்**



# பாங்குச் செய்திகள்

கடந்த கல்வி ஆண்டில் பள்ளி மறைக்கல்வி சிறப்பாக நடத்தியதற்காக நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி, புனித வளனார் பெண்கள் துவக்கப்பள்ளி, தூய மரியன்னை ஆண்கள் துவக்கப்பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளுமே சாத்தான்குளம் மறைமாவட்ட அளவில் முதல் நிலை பெற்றன. வழிநடத்திய தாளாளர் தந்தை, தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாணவர், மாணவிகளுக்கு வாழ்த்துக்களோடு பாராட்டுகிறோம்.

03-07-2013 புதன்கிழமை முதல் நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் வைத்து டியூசன் வகுப்புகள் மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை தாளாளர் தந்தை, திருத்தொண்டர், அருட்சகோதரி மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

06-07-2013 அன்று முதல் சனி வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றது.

07-07-13 காலை 10.00 மணியிலிருந்து 12.00 மணி வரை பங்குபேரவை தேர்தல் உறுப்பினர்கள்முன்னிலையில் நடைபெற்றது. 12 அன்பியங்களின் உறுப்பினர்களும் அந்தந்த அன்பியத்தின் சார்பாக ஒரு ஆண், ஒரு பெண் என இரண்டு அன்பிய பொறுப்பாளர்களை தேர்ந்தெடுத்தார்கள் ஜனநாயக முறைப்படி அன்பியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் பக்தசபைகளிலிருந்து. ஒரு மனதாக தேர்ந்தெடுக்கபட்ட உறுப்பினர்கள் மற்றும் பங்குதந்தையின் தனிப்பட்ட அதிகாரத்தின் கீழ் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்கள் கூட்டத்தில் பங்குமேய்ப்பு பணிக்குழுவின் நிர்வாகிகளை தேர்ந்தெடுத்து மேதகு ஆயர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## பங்கு மேய்ப்பு பணி குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பங்குத் தந்தை |
| உப. தலைவர் | - | திரு. S. மரிய அந்தோணி ஜார்ஜ் |
| செயலாளர் | - | திரு. M. சிங்கராயன் |
| துணைச் செயலாளர் | - | திருமதி ரெவனியூஸ் ராணி |
| பொருளாளர் | - | திரு. எட்வின் காமராஜ் |

**உறுப்பினர்கள் (ஆண்கள்)**

திரு. ரவிஸ்டர், திரு. அருள்ராஜ், திரு. ஆனந்தராஜ், திரு. லெனின்,
திரு. ஹேமல்ஸ், திரு. அருள்செல்வன், திரு. சூசைராஜ், திரு. வினோத்,
திரு. அமலதாஸ். திரு. லடிஸ்லாஸ், திரு. இருதயராஜ், திரு. டோமினிக்ராஜன்,
மரிய வர்க்கீஸ், திரு. A. ஜெயராஜ், திரு. லாரன்ஸ்,

**<u>நிதிக்குழு உறுப்பினர்கள்</u>**

பங்குத்தந்தை, திரு. S.M.A. ஜார்ஜ் , திரு. சிங்கராயர், திரு. காமராஜ், திரு. ஜேம்ஸ், திரு. ராஜேந்திரன், திருமதி அனிதா

**பெண்கள்**

செல்வி, எழில்அரசி, திருமதி மரியரேவதி, செல்வி, ஜார்ஜ் ரெபின், ஜமிலா, திருமதி புஷ்பராாணி, திருமதி மேளரிஸ், திருமதி.J. ரெஜினாள் மேரி, திருமதி அவிலாதெரஸ் மேரி, திருமதி ஷோபா செல்வி சகாயமேரி, திருமதி A. ரெஜினாள் மேரி திருமதி ஷகிலா திரு. ஜென்ஸிலின் ரிட்டா.

14-07-2013 அன்று ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு வள்ளியூரில் வைத்து பயிற்சி வகுப்ப நடைபெற்றது. இதில் நமது பங்கில் ஞாயிறு மறைக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த கல்வி ஆண்டில் நடைபெற்ற ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள் சிறப்பாக நடத்தியதற்காக நமது பங்கு மறைவட்ட அளவில் ஞாயிறு மறைக்கல்வி முதல் நிலையைப் பெற்றது.

கடந்த ஆண்டு ஞாயிறு மறைக்கல்வி தேர்வில் 5ஆம் வகுப்பு மாணவி, சர்மிளா மறை மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்றாள்.

இந்த ஆண்டு நம்பிக்கை ஆண்டை முன்னிட்டு ஞாயிறு மறைக்கல்வி பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டு விட்டன. அதில் 3,4,5 ஆம் வகுப்புகளுக்கு பாடத்திட்டம் தயாரித்த நவீன், ஜெகன் ஆகியவர்களின் பாடத்திட்டங்கள் ஞாயிறு மறைக்கல்வி பாடப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

22.07.2013 அன்று நமது புனித மரியன்னை மேல்நிலைபள்ளியில் வைத்து நமது பஞ்சாயத்து சார்பாக அரசு சிறப்பு மருத்துவ முகாம் நடைப்பெற்றது.

24.07.13 அன்று சாத்தான்குளம் மறைவட்ட அளவில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நம்பிக்கை ஆண்டு பயிற்சி பாசறையில் நமது ஊர் சார்பாக திருத்தொண்டர். டேவிட் வளன், திருமதி.ரெஜினா மேரி, திருமதி. ரெவினியூஸ் ராணி, திருமதி.அனிதா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


# வாழ்த்துகிறோம்

நானிலத்தில் கிறிஸ்துவும் திருச்சபையும் போல அன்பும் அறனுமாய் என்றும் எடுத்துக்காட்டாய் இனிது வாழ வாழ்த்துகின்றோம்.

10.07.2013

D. சந்தியாகு ராஜரெத்தினம்
S.ஜோஸ்பின் ரோலிண்டா, பொற்பை

# அரசியான புனித கன்னி மரியாள்



பாப்பு 12 ஆம் பத்திநாதர் 11.10.1956-ல் இவ்விழாவை ஏற்படுத்தினார். கன்னிமரியாள் அரசி என்று திருச்சபையானது ஆதியிருந்தே விசுவசித்து வந்திருக்கிறது. வேத புத்தகத்திலும் பரம்பரையிலும் இந்த விசுவாசத்திற்கு ஆதாரங்கள் உண்டு. என்றும் மரியாள் அரசியாக இருக்கிறாள். ஏனெனில் அவள் பெற்றெடுத்த மகன் அனைத்துக்கும் அரசர்அனைத்துக்கும் ஆண்டவர். அவர் நம்மை மீட்ட அரசரும் ஆண்டவரும் ஆவார். புனித மரியாள் மீட்பின் பணியில் இரட்சகருடன் ஒத்துழைத்தாள். தனது உதரத்தில் அவர் உருவாக அவள் அனுமதி அளித்தாள். நம் மீட்பராகும்படி அவரை அவள் முழு மனதுடன் கையளித்தாள். நாம் எல்லோரும் தன் மகனிடம் செல்ல மோட்சத்துக்குப் போக வேண்டுமென்று அவள் ஆசிக்கிறாள். செபிக்கிறாள். பல வழிவகைளைக் கையாளுகிறாள். எனவே அவள் அரசி, இந்த விழா அன்று மானிட சந்ததியை மரியாளின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். அவளே மானிட சந்ததியின் நம்பிக்கை. திருச்சபை வெற்றி பெறவும் கிறிஸ்தவ அமைதி நிலவவும் அவளே துணை புரியவேண்டும். எல்லோரும் மிகுந்த நம்பிக்கையுடன் இந்த அன்னையின் இரக்கத்தின் சிம்மாசனத்தை அனுக வேண்டும். சங்கடங்களில் உதவியையும் இருளில் ஒளியையும் துன்ப துயரங்களில் ஆறுதலையும் இவளிடமாய் தேடி அலைவோம். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்தால் தாங்கள் கேட்ட அமைதியை பெற்று தருவாள்இயேசுநமக்கு நித்திய மகிழ்ச்சியாகவும் ஆனந்தமாகவும் இருப்பார்.

**சிந்தனை :** இறைவனை நோக்கி அருள் கேட்டு மன்றாடுவோம் ஆனால் மாதா வழியாக அதைக் கேட்போம். (புனித பெர்னார்து)

**செபம்** : மரியாயின் மாசற்ற இருதயமே, திருச்சபையையும் உலகத்தையும் காப்பாற்றும்.

– M.**மிக்கேல் உஷா,** பொற்பை

## திருக்கல்யாண மாதா திருத்தலம் வர முக்கிய பேருந்து வழித்தடங்கள் :-

திருநெல்வேலி to சாத்தான்குளம் to பொத்தகாலன்விளை

நாகர்கோயில் to சாத்தான்குளம் to பொத்தாலன்விளை

தூத்துக்குடி to திருச்செந்தூர் to சாத்தான்குளம் to பொத்தகாலன்விளை

# விண்ணேற்பு திருநாள்

ஆகஸ்டு 15 ம் நாள் நம் புனித கன்னி மரியின் விண்ணேற்பு திருநாளையும். அதே நாளில் நம் இந்திய நாடு சுதந்திரம் பெற்ற விழாவையும் நாம் கொண்டாடுகிறோம். என்பது நமக்கு பெரும் மகிழ்ச்சியாகும். பாப்பிறை 12ம் பத்தி நாதர் கி.பி. 1954 ஆம் ஆண்டில் கன்னிமரி ஆன்மாவோடும், உடலோடும், விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டாள். என்ற திருச்சபையின் போதனையை விசுவாசம் சத்தியம் என்று அறிவித்தார். ஆன்மாவிலும், உடலிலும் கிறிஸ்துவினுடைய மகிமையில் பங்கு பெற்ற முதல் (புனிதவதி) கன்னிமரி என்பதை இந்த விண்ணேற்பு திருநாள் நமக்கு உணர்த்துகின்றது. உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு அன்னை மரியாள் எடுத்துக் கொள்ளப்பட்டார். விண்ணுலக அரசியாக முடிசூட்டப்பட்டு தனது புதுமைகளாலும், அற்புதங்களாலும் மண்ணுலகின் அரசியாகவும் முடிசூட்டப்பட்டாள். ஜென்ப பாவமின்றி உற்பவித்த இறைவனின் தாய் என்றும் கன்னியாயிருக்கின்ற மரியா. அவரது பூவுலக வாழ்வு முடிந்தபின் தனது உடலோடும், ஆன்மாவோடும் வானக மகிமைக்குள் மரியாள் எடுத்து செல்லப்பட்டாள் என்பதாகும்.



இறைமகன் இயேசுவின் உயிர்ப்புக்கும் மரியாவின் விண்ணேற்புக்கும். நிறைந்த ஓற்றுமை உண்டு. அன்னையின் விண்ணேற்பு தனது மகனின் உயிர்ப்பில் பங்கு பெருவதோடு உலக முடிவில் நிகழும் கிறிஸ்தவர்களின் உயிர்ப்பினை உறுதி செய்யும் இறைவாக்கவும் திகழ்கிறது. என க்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நமக்கு விளக்குகிறது. மரியா ஜென்ம பாவமின்றி உற்பவித்த கனனியாதலால் இறைவனால் தேர்ந்து கொளளப்பட்டார் இறுதியில் இறைவனால் உடலோடும்,ஆண்மாவோடும் விண்ணைநோக்கி உயர்த்தப்பட்டாள். எனத்திருத்தந்தை 12ம் பத்திநாதர் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு உடலோடும், ஆன்மாவோடும், விண்ணகம் சென்ற மரியா மண்ணக மாந்தர்களின் குறைபோக்கும், பாவ வாழ்வின் கறை போக்கும், அடிமைபட்டோரின் இறைபோக்கும், கிறிஸ்தவத்தின் மறைபோக்கும் விளக்காக விண்ணகத்தில் ஒளிர்ந்து மண்ணக்தின் இருள் போக்குகின்றார். விண்ண தாயாகின்றான். மிளிர்ந்து மண்ணகத்தை தாலாட்டுகிறாள். விண்ணகப் பூவாய் மலர்ந்து மண்ணகத்தில் மணம் வீசுகின்றாள். எனவே கடவுள் கையில் மரியா தவழ்ந்தாள் கன்னித் தூய்மையில் கற்புக்கரசியாக ஒளிர்ந்ததால் மரியாவின் வாழ்வு முழுவதுமே ஒரு மாறாத மறையாத மறை பொருளாவே இருக்கிறது விசுவாசமே ஆகும். இவ்வுண்மை இறைவனையும பிரதிபலிக்கும்.

புனித ஜான் தமசீன் கன்னிமரியின் விண்ணேற்புக்குட்டின், மரபு எவ்வாறு இருந்தது என்பதை எடுத்துரைப்பதில் தலை சிறந்தவராகத் திகழ்கிறார். இறைமகன் இயேசு சிலுவையில் தொங்கியதன் திருமகனை உற்று நோக்கியவாறு நம் அன்னை கல்வாரி மலமேல் நின்றவர் தனது ஆண்மாவை ஒரு வாள் ஊடுருவாக கையநித்தார். அத்தகையவர் வான் வீட்டில் வீற்றிருக்கும் தந்தையை இவைிடாது. கண்டு களிப்பதும் பொருத்தமானதே இறைமகன் உவந்து அளிக்கும் சலுகைகளைத் தேவதாய் பெற்று மகிழ்வதும் பொருத்தமானதே நம்முடைய விண்ணேற்பு விழாவை நாம் ஆண்டு தோறும் கொண்டாடி மகிழ்கின்றோம்.

விண்ணுலக அரசியே வாழ்க !

A. அனிட் ரோஸ் மேரி, சங்கரன் குடியிருப்பு



## நன்றிகள் பலகோடிகள் 06.07.2013 முதல்சனி உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| ஜெபாஸ்டின் ரெனிசா (மதுரை) | 500.00 |
| அந்தோணி விமல் (புத்தோர்) | 2000.00 |
| அன்றன் ஜேம்ஸ் பிரிட்டோ (கொழுந்தட்டு) | 1000.00 |
| பிரான்ஸிஸ் சேவியர் (ஹோலிகிராஸ்நகர்) | 5000.00 |
| பமெலா (பெரியதாழை) | 1000.00 |
| ரெஜினாள் மேரி (பொற்பை) | 100.00 |
| சுவாமிநாதன் (பொற்பை) | 500.00 |
| ராஜீ (கருங்கல்) | 980.00 |
| அந்தோணிராஜ் (பொற்பை) | 500.00 |
| இன்னாசிமுத்து (சிவகாசி) | 501.00 |
| லூக்காஸ் மளிகை (திருப்பூர்) | 1000.00 |
| அந்தோணி பாஸ்கர் (பொற்பை) | 500.00 |
| S.K. ராஜ் (பொற்பை) | 200.00 |
| அந்தோணி ஜவஹர் பிரிட்டோ அடைக்கலாபுரம் | 1001.00 |
| மணி மெக்கானிக் (பொற்பை) | 500.00 |
| ஜெபஸ்டின் ரெனிசா (மதுரை) | 500.00 |
| D. ஜஸ்டின் சுதாகர் (மதுரை) | 10000.00 |
| எட்வர்ட் லாரன்ஸ் (பொற்பை) | 200.00 |
| சுமதி (இணையர்) | 400.00 |
| அந்தோணி செல்வன் ரஜீலா சாத்தை | 1000.00 |
| அந்தோணி ராஜ் (பொற்பை) | 500.00 |
| மெக்கிள் ஜிஜி (பூந்துறை) | 5000.00 |
| குணசேகரன் (திருச்செந்தூர்) | 200.00 |
| பெல்லார்மின் (கோவனம்) | 1000.00 |
| பதுவா டிராவல்ஸ் (மணப்பாடு) | 500.00 |
| பாக்கியராஜ் (நாசரேத்) | 100.00 |
| சுரேஸ் பாண்டியன் (பொற்பை) | 100.00 |
| மகேஸ் பிரியா (புன்னக்காயல்) | 2000.00 |
| ஜெயசீலன் ஜார்ஜ்மேரி (குளச்சல்) | 1000.00 |
| முருகேசன் (வடக்கு நரையன் குடியிருப்பு) | 1000.00 |
| ரீமாரவேல் (திசையன்விளை) | 200.00 |
| திவ்யா வினோத் (பொற்பை) | 200.00 |
| தொம்மை (புன்னக்காயல்) | 2000.00 |
| சந்தனராஜ் (தூத்துக்குடி) | 50.00 |
| மரியநாயகம் செலீன் மேரி (கொம்புத்துறை) | 1000.00 |
| ராஜேந்திரன் (சேதுக்குவாய்ந்தான்) | 5000.00 |
| யேசுவடியான் (பொற்பை) | 100.00 |
| பெயர் விரும்பாத நபர் | 1000.00 |
| செல்வராஜ் (சாத்தை) | 1000.00 |
| மரிய விஜய் (பொற்பை) | 500.00 |
| அந்தோணி ஜீவா, சுபா | 1500.00 |
| அருள்ராயப்பன் டென்சிங் (பொற்பை) | 100.00 |
| ராஜேந்திரன் (பொற்பை) | 100.00 |
| மொத்தம் | 51832.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| மிக்கேல் பூபதி(கன்னியாகுமரி) | அரிசி 50 கிலோ |
| வின்சென்ட் ஜோஸ்பின் | அரிசி 25 கிலோ |
| கிறிஸ்டின் அம்மாள்(குளச்சல்) | அரிசி 25 கிலோ |
| ரவீஸ்டர், பொற்பை | உருளை 4 மூடை தக்காளி 12 பாக்ஸ் சி. வெங்காயம் 1 மூடை<br>பெ. வெங்காயம் 4 மூடை<br>சேனை 1 மூடை<br>கேரட் 1மூடை ப. மிளகாய் 1 மூடை<br>மாங்காய் 10 கிலோ |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 3மூடை M.S.R. |
| ஜஸ்டின் | அரிசி 1மூடை |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 1மூடை |
| P. ஜோசப் செல்வராஜ்(ஈரோடு) | அரிசி 1மூடை |
| ஜெரோம் குயிண்டின்(கவரபடபேட்டை) | அரிசி 1மூடை |
| சூசை மிக்கேல்(கோவை) | அரிசி 50 கிலோ |
| ராஜேஷ் அமலா( பொற்பை) | அரிசி 50 கிலோ |
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி, 50 கிலோ |
| ஆல்வின் வசந்த்(முட்டம்) | அரிசி 100கிலோ |
| ஷெரின் நிர்மலா (இராமன்துறை) | அரிசி 25 கிலோ |
| சாண்டன் நிர்மலா (கொம்புதுறை) | அரிசி 100 கிலோ |

கடந்த முதல்சனி விடுபட்டநன்கொடையாளர்கள் :

| | |
|---|---|
| திரு. இம்மானுவேல் ஜஸ்டின் தாமஸ், பொற்பை | அரிசி 70 கிலோ |

## முதல் சனி செலவு விபரம் 06.07.2013

| | |
|---|---|
| யோவான் சமையல் குளு | 13000.00 |
| ஹென்றி மளிகை | 59850.00 |
| இருதயராஜ் ரூபிஸ் டோர் 3 ½ அரிசி | 11550.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை 103 | 5615.00 |
| அந்தோணி ராஜ் விறகு 51 எடை | 6885.00 |
| பேச்சியம்மாள் தூய்மைபணி | 2000.00 |
| ஜெயக்குமார் டிரக்டர் 5 நடை | 1250.00 |
| சேசு ஜெயராஜ் மற்றும் பணியாளர்கள் | 4500.00 |
| வின்சென்ட் உணவு விடுதி | 1111.00 |
| சென்னை பஸ் காய்கறி செலவு | 700.00 |
| இம்மான் வண்டி வாடகை + தண்ணீர் லோடு | 1625.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| மொத்தம் | 1,09,112.00 |

| | |
|---|---|
| முன் இருப்பு வங்கியில் | 19466.00 |
| முதல்சனி மீதி பொருட்கள் ஏல வரவு | 17150.00 |
| பங்கு தந்தை மூலம் பொருட்கள் ஏல வரவு | 40000.00 |
| நன்கொடை மூலம் வரவு | 51832.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | 3000.00 |
| கையில் | 207.00 |
| மொத்தம் | 131655.000 |
| செலவு | 109112.00 |
| இறுதி இருப்பு | 22543.00 |

| | |
|---|---|
| வங்கியில் | 22466.00 |
| கையில் | 77.00 |
| இறுதி மொத்தம் இருப்பு | 22543.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.05.13 அன்று இருப்பு | 320034.00 |
| 01.06.13 முதல் 31.06.13 வரை விற்பனை | 110043.00 |
| மொத்தம் | 430127.00 |
| 01.06.13 முதல் 30.06.13 வரை செலவு | 78275.00 |
| 30.06.2013 அன்று இருப்பு | 351852.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

## விஞ்ஞான கண்டுபிடிப்பு

**ஃப்ரிட்ஜ்:**

சுவிட்சர்லாந்தைத் சேர்ந்த கார்லலிண்டே என்பவரால் 1877 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

**சிமெண்ட்:**

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜோசப் ஆஸ்ப்டின் 1824 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார்.

**பேசும்படம்:**

அமெரிக்காவின் வார்னர் சகோதரர்கள் 1926 ஆம் ஆண்டு கண்டுபிடித்தனர். அந்த ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் தேதி நியூயார்க்கில் திரையிடப்பட்டது.

**அணுக்கதிர்:**

நியூசிலாந்தின் எர்னஸ்ட் ரூதர் போர்டு 1971 ல் நைட்ரஜன் அணுவை கதிரியக்க துகள்களால் பிளந்து அணுக்கதிர்களை கண்டுபிடித்தார்.

# விண்ணுலகத் தாய்

## வெற்றியின் தாய்



**அன்னையின் விண்ணேற்பு ஆன்மிக வாழ்வின் வெற்றி :-**

அன்னையின் வானுலக விண்ணேற்பு என்பது அவர் குழந்தைகளான நம் அனைவருக்கும் ஆன்மீக வாழ்வில் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகும்.

ஆம் மனிதனாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் வளமாக வாழ்வின் வெற்றி பெற துடிக்கின்றோம். ஆனால் நம் ஆன்மீக வாழ்வில் தோற்று விடுகிறோம். ஆன்மீக வாழ்வில் வெற்றி பெற்றால்தான் நம்மை படைத்த இறைவனிடம் வெற்றி வீரர்களாய் செல்ல முடியும் என்பதை மறந்து விடுகிறோம்.

ஆனால் கடவுள் படைப்பில் ஆன்மீக வாழ்வில் நூறு சதவீதம் வெற்றி பெற்று கடுகளவும் களங்கமில்லாமல் தம் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுலகிற்கு வெற்றிப்படி ஏறிச் சென்றவள் அன்னை மரியாள் பரிசுத்த அன்னை மரியாள் ஆன்மீக வாழ்வில் வெற்றி பெற நமக்கு தன் வாழ்வின் மூலம் தன் செயல்களை கற்பிக்கின்றார்.

**1. கீழ்ப்படிதல் :**

திருமணமாகாத ஒரு கன்னிப்பெண் கருத்தரிப்பது ஒரு அவமான சின்னம் என்பது தெரிந்ததும் இறைவனின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தார் (மத் 118:19)

**2. எளிமை :**

நான் கடவுளின் மகனைப் பெற்றெடுக்கப் போகிறேன் என்று ஆணவம் கொள்ளவில்லை. கர்வம் அடையவில்லை. தன்னடக்கத்துடன் அதை ஏற்றுக்கொண்டு எலிசபெத் எப்பளுக்கு உதவுவதற்காக கரடு முரடான வழிகளைத் தாண்டிச் செல்கின்றார். (லூக் 1:56)

**3. நம்பிக்கை :**

நம் தாய் கடவுள் மீது அபாரமான நம்பிக்கை வைத்திருந்தார். அதனால் தான் யாரும் செய்ய முடியாத செயல்களை எற்றுக் கொண்டார். அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள் (யோவான் 2:5)

**4. கடமையுணர்வு :**

தான் பெற்றெடுக்கப்போவது கடவுளின் மகன் அவரால் எல்லாம் முடியும் என்று அறிந்திருந்தும் இயேசுவை ஆன்மீக வாழ்வில் வளர்ப்பதற்காக ஒவ்வொரு நிமிடமும் தன் கடமையில் ஒரு துளியளவும் சிதறாமல் கண்ணும் கருத்துமாக கண்ணின் மணி போல பாதுகாத்து வளர்த்து வந்தார்.

**5. பொறுமை :**

தனக்கு கொடுக்கப்பட்டுள்ள இந்தப் பணியில் எத்தனையோ இன்னல்கள், இடறல்கள் வந்தாலும் அத்தனையும் இன்முகத்தோடு, முணுமுணுப்பில்லாமல் ஏற்றுக் கொள்கிறார். சிமியோன் உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும் என்று சொல்லும் போதே அவளுக்குத் தெரியும். இந்த பணியில் துன்பங்கள் துயரங்கள் வருமென்று ஆனால் அவள் அதை விட்டு ஓடவில்லை (லூக் 2: 35)

**6. ஜெபம் செய்தல் :**

நான் கடவுளின் தாய் என் மகன் எல்லாம் பார்த்துக் கொள்வார். என்று வெறுமனே இருந்து விடவில்லை. ஒவ்வொரு நிமிடமும் ஜெபித்துக் கொண்டிருந்தார் (லூக்கா 2:51)

அன்னை மரியாள் ஆன்மீக வாழ்வில் வெற்றிபெற்று தன் முழு ஆன்மாவோடும் முழு சரீரத்தோடும் விண்ணுலகம் சென்ற நாளை நினைவு கூறும் நாம் நம் குடும்ப வாழ்வில் அவள் நமக்கு காட்டிய வழியில் நடந்து கடவுள் நமக்கு கொடுத்த பணியினை நல்ல முறையில் செய்து முடித்து ஆன்மீக வாழ்வில் வெற்றி பெற்று விண்ணுலகிற்கு வெற்றிப்படி ஏறிச் செல்ல அருள்புரிய நம் பரிசுத்த அன்னை மரியாளை மன்றாடுவோம்.

S. நிர்மலா ராணி, மாரர்க்கம்பட்டி

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் ! 04639!261230 , 261330**

**04!05!2013 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | ! | 1800 பேர் |
| குழந்தைபாக்கியம் | ! | 1751 பேர் |
| சுகப்பிரசவம் | ! | 1473 பேர் |
| நற்சுகம்பெற | ! | 2143 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | ! | 1527 பேர் |
| தேவஅழைத்தல் | ! | 979 பேர் |
| வேலைகிடைக்க | ! | 1841 பேர் |
| தொழில்முன்னேற்றம் | ! | 2519 பேர் |
| குடும்பசமாதானம் | ! | 1802 பேர் |
| குடும்பநலன் | ! | 2186 பேர் |
| உறவினர்நன்மைக்காக | ! | 1697 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | ! | 1932 பேர் |
| அலகைதொல்லைதீர | ! | 1764 பேர் |
| மனஅமைதிக்காக | ! | 1985 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | ! | 1457 பேர் |
| மனமாற்றமடைய | ! | 1958 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | ! | 1833 பேர் |
| நல்லஇல்லம்அமைய | ! | 1799 பேர் |
| சோதனைகளைவெல்ல | ! | 1930 பேர் |
| கடன்தொல்லைதீர | ! | 2012 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | ! | 798 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும். !பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**



## பெண் சுதந்திரம்

விடுதலை – இருந்தும் வீரமில்லாமல் விளக்கேற்ற
விலைபேசி வாழ இருப்பது பெண் ...!
விடுதலை – இருந்தும் வீரத்தோடு விண்வெளியில்
விளையாடி ஆளப்பிறந்ததும் பெண்...!
விடுதலை – இருந்தும்
மாணவி – மனைவியானதும்...!
மனைவி – மாணவியானதும் பெண்
பெண்ணாதிக்கம் நிறைந்து !
விடுதலை சுதந்திரமாகட்டும்!



# கன்னித் தூய்மை கெடாத மாதாவே

மரியா தவழ்ந்தாள்
யில் என்றும் ஒளிர்ந்தாள்"அன்னை மரியா, க த மாதா என்று தாயாம் திருச்சபையும் கடவுளின் பக்த து வருவது நமக்கெல்லாம் பெருமை. மரியா செபம் செய்வதில் தாராள மனமும் பக்தி முயற்சியில் தணியாத தாகமும் கொண்டிருந்தார். இதனால் அவர் கற்புநெறியில் நடந்து கன்னித் தூய்மையில் நிலைத்திருந்தாள்.

பாலைவனத்தில் இயேசு சோதிக்கப்படுமுன் தூய ஆவியால் நிரப்பபட்டார் தூய ஆவியின் துணையால் சாத்தானை வென்றார். அது போலவே, மரியாளும் தனது மண்ணக வாழ்வில், தூய ஆவியின் துணையால் உலகில் பாவக்கறையிலிருந்தும் தீய இச்சைகளிலிருந்தும் உடல் பெறும் சிற்றின்ப ஆசைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டார். மரியாவின் பிறப்பு முதல் இறப்பு வரை அவர் தூய ஆவியால் நிரப்பப்பட்டதால் கன்னித்தூய்மை கெடாத அன்னையாகத் திகழ்ந்தார். தூய ஆவி வலிமை, முழு ஆற்றல், முழு மனத்தோடு கடவுளை அன்பு செய்ததோடு இறைவாக்கினர் விடுக்கும் அழைக்கும் மரியாள் பணிவோடும் கனிவோடும் செவிமடுத்தார். தொழுகைக் கூடத்திலும், தனது வீட்டிலும் மரியாள் ஒழுக்க நெறியுடன் வாழும் அறிவையும் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து தியாகத் தீபமாக பொறுமையின் பொக்கிசமாக அன்பின் அடித்தளமாக வாழும் கலையையும் பெற்றாள். இதுவே மரியாள் கன்னித் தூய்மையில் நிலைத்திருக்க உதவிய சாதனமாகும்.

4-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான், "மரியா கன்னித்தூய்மை கெடாத மாதா" என்ற உண்மை உலகில் பல பகுதிகளுக்குத் தெரிய வந்தது. மரியாளின் வாழ்நாள் முழுவதும் கன்னித் தூய்மையின் வாழ்ந்தார் என்று 2-ஆம் வத்திக்கான் சங்கம் உறுதி அளித்தது (1962-1965).

"கன்னி மரியா உடலிலும் கன்னித் தூய்மையாக.
உள்ளத்திலும் கன்னித் தூய்மையாக மற்றும்
நம்பிக்கையிலும் கன்னித் தூய்மையாக வாழ்ந்தார்"

-புனித அகுஸ்தினார்.

- நன்றி : **தாயே எங்கள் தஞ்சமே**




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

★ திருமண வரம் கிடைத்ததற்கு நன்றி. அல்போன்ஸ் குமார் – மரியநாடு

★ பதவி உயர்வு கிடைத்ததற்கு நன்றி. மேரி நிர்மலா – ஊட்டி

★ வேலை கடைத்ததற்கு நன்றி. அணில்குமார் – நீரோடி

★ அன்னை செய்த அனைத்திற்கும் நன்றி. ஜோஸ் – சின்னத்துரை

★ குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி. ராணி குமார் – வல்லன்விளை

★ அன்னை செய்த அனைத்திற்கும் நன்றி. கரோல் ஜோஸ் – ஆன்றனி

★ நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி. ஜெபஸ்டின் – உவரி

★ 10– ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கு நன்றி. ஜிஜோ – தொலையாவட்டம்

★ திருமணம் நல்ல முறையில் நடைபெற்றதற்கு நன்றி. ஜோஸ் – அழிக்கால்

★ வெளிநாட்டில் வேலை கிடைத்ததற்கு நன்றி ஜெஸ்பின் – ரீன் – மும்பை

★ வெளிநாட்டில் வேலை கிடைத்ததற்கு நன்றி ஜோயஸ் – சென்னை

★ திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி. ஜாண், ரம்யா – மதுரை

★ அன்னை செய்த அனைத்திற்கும் நன்றி. பிரிட்டோ– இணையம்

★ திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி டோம்னிக் அமலா – தூத்துக்குடி

★ கும்ப சமாதானம் கிடைத்ததற்கு நன்றி. பானு – கேரளா

★ திருமணம் நடந்ததநற்கு நன்றி. செல்வன், அஜீஸ் – மருங்கூர்

★ திருமணம் நடந்து குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி. ஜெகன், ரூபி –புதுக்கடை

★ குடும்ப சமாதானம் கிடைத்ததற்கு நன்றி. டெய்சி ஆரோக்கியம் – புதுக்கடை

★ திருமணம் நடந்ததற்கு நன்றி. பிரின்ஸ் – நாகர்கோயில்

★ வேலை கிடைத்ததற்கு நன்றி. ஆலிஸ் ஆன்டனி – கேரளா

★ வெளிநாட்டில் வேலை கிடைத்ததற்கு நன்றி. ஜஸ்டின் – வள்ளன்விளை

★ இறைவன் செய்த அனைத்திற்கும் நன்றி. ஜெஸி, தேவராஜ் – சென்னை

★ வேலை வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றி. லாரன்ஸ் – மணலிக்கரை

★ வெளிநாட்டிற்கு விசா கிடைத்ததற்கு நன்றி. ஹெலன் ரெனால்டு – சென்னை

★ திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி. சூசை எடிசன் – மதுரை

★ விசைப்படகு வேலைக்கு சென்றதற்கு நன்றி. ஜோபிஸ் – மணலிவிளை

★ குழந்தை வரம் ககிடைதத்ததறற்கு நனன்றறி. டிஸ்மென் டிலக்னா – பொயதாழை

★ அறுவை சிகிச்சைக்கு வெற்றி பெற்றதற்கு நன்றி. அந்தோணி ராஜ் – திருப்பெத்தூர்

★ திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி. செல்வன், புளோரன்ஸ் – பால இராமபுரம்

– பங்குத்தந்தை

# புனித சுவாமிநாதர் (1170–1221)

இவருடைய தாய் மிகுந்த பக்தி உள்ளவள் அடிக்கடி கடவுளுடன் பேச இவருக்கு தாய் கற்பித்தாள். இரவில் படுத்திருக்கும் பொழுது எழுந்து முழுந்தாட்படியிட்டு செபிப்பார். பின்னர் வெறும் தரையில் படுத்து உறங்குவார். புனித அகுஸ்தீனுடைய சபையில் சேர்ந்து தன்னையும் அர்ச்சித்து வந்தார். பிரசங்கம் செய்து பிறரையும் அர்ச்சிக்க முயன்றார். ஆயருடன் ஒரு முறை இவர் பிரான்ஸ் நாட்டிற்கு சென்றார். அங்கு அல்பபிஜன்ஸ் என்னும் பகிதக் கொள்கை பரவி ஏராளமான தீமைகளை விளைவித்து வந்தது. இத்தீமை பரவாமல் தடுக்க ஆயரும் இவரும் உறுதி செய்தனர். பாப்புவின் அனுமதியுடன் பக்தர்களின் மத்தியில் ஆர்வத்துடன் உழைத்தார். பாவிகள் மனந்திரும்ப செபித்தார். தவம் செய்தார். தண்ணையே தண்டித்தார். எதிர்பார்த்த அளவு பலன் கிடைக்கவில்லை. தேவதாயின் உதவியை நாடினார். அன்னை இவருக்குத் தோன்றி என்று செபமாலையைப் பற்றி எங்கும் பிரசங்கம் செய். தப்பறையான கொள்கைகளை அழிக்க செபமாலையே சிறந்த கருவி புண்ணியத்தில் வளரவும் அது பேருதவியாக இருக்கும். கடவுளது கோபத்தைக் தணித்து தேவ இரக்கத்தை அது மக்களுக்கு பெற்றத் தரும்.கடவுளது திருச்சபைக்கு அது பெருத்த சிறந்த பாதுகாப்பாய் இருக்கும் என்றாள். செபமாலை பக்தியினால் அநேகரை, இவர் மனந்திருப்பினார். சிறுவர்களின் கல்விப் பயிற்சிக்காக கன்னியர் சபை ஒன்றையும் மக்களுக்கு போதிக்க ஆண்களுக்கென்று துறவற சபை ஒன்றையும் ஏற்படுத்தினார். 1216–ல் ஒரு சபை உண்டு பண்ணி போப்பின் அனுமதியும் பெற்றார். தமது 51 ஆம் வயதில் இறந்தார்.

சிந்தனை : செபமாலையை தக்க விதமாக செபித்து இயேசுவைப் போலவும் மரியாளைப் போலவும் வாழவதற்கான பலத்தைப் பெறலாம் நம் சத்துருக்களான உலகம், பசாசு உடல் இவற்றை முறியடிக்கலாம்.

செபம் : திருச்செபமாலையின் இராக்கினியே திருச்சபையையும் உலகத்தையும் காப்பாற்றும்

தூயவர்களின் வரலாறு

# ஜீன் 2013 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** | | |
| முன்னிருப்பு வங்கியில் – 51185 | | |
| கையில் – 7093 | 58278.00 | |
| திருப்பலி 249X70; 80X70 | 23030.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை – 8680 | | |
| கிளை பங்கு – 380 | 9060.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 309865.00 | |
| சேர்ச்சை சேலைகள் ஏல வரவு | 31290.00 | |
| கல்யாண மண்டபம் + அறை வாடகை | 1500.00 | |
| ஞானஸ்நானம் | 500.00 | |
| அடக்கம் | 625.00 | |
| பள்ளிகள் மூலம் | 745.00 | |
| ஏல வரவு | 6198.00 | |
| நன்கொடை வரவு | 10290.00 | |
| புத்தக விற்பனை மூலம் | 900.00 | |
| பழைய வரிகள் மூலம் | 1750.00 | |
| முதல் சனி கடைகள் மூலம் | 3660.00 | |
| **மொத்தம்** | 457691.00 | |
| **செலவுகள் :** | | |
| திருத்தல அறிவிப்பு மலர் பாக்கி | | 55000.00 |
| முதல்சனி குருக்கள்படி | | 8150.00 |
| ஆலய உண்டியல்கள் 2 செய்ய | | 25000.00 |
| பள்ளி தேர்ச்சி பிளக்ஸ் போர்டு 2 | | 4700.00 |
| திருத்தல அறிவிப்பு விழா சாப்பாடு செலவு (மதியம், இரவு) | | 137160.00 |
| முதல் சனி உணவு வகைக்கு கொடுத்தது | | 70800.00 |
| முதல் சனி பூக்கள் வாங்கியது | | 2100.00 |
| ஆசிரியர்கள் சால்வை | | 3000.00 |

| | |
|---|---|
| திருக்கல்யாணி சவுண்ட்ஸ் திருத்தல அறிவிப்பு முன்பணம் | 25000.00 |
| திருத்தல அறிவிப்பு மலர் பாக்கி | 55000.00 |
| முதல்சனி குருக்கள்படி | 8150.00 |
| ஆலய உண்டியல்கள் 2 செய்ய | 25000.00 |
| பள்ளி தேர்ச்சி பிளக்ஸ் போர்டு 2 | 4700.00 |
| திருத்தல அறிவிப்பு விழா சாப்பாடு செலவு (மதியம், இரவு) | 137160.00 |
| முதல் சனி உணவு வகைக்கு கொடுத்தது | 70800.00 |
| முதல் சனி பூக்கள் வாங்கியது | 2100.00 |
| ஆசிரியர்கள் சால்வை | 3000.00 |
| திருக்கல்யாணி சவுண்ட்ஸ் திருத்தல அறிவிப்பு முன்பணம் | 25000.00 |
| அன்பிய விளக்க கூட்டம் அருட்தந்தை படி | 500.00 |
| வெள்ளி விழா பொது அசனம் | 36000.00 |
| எரிவாயு | 440.00 |
| தொலைபேசி கட்டணம் 2 இணைப்புகள் | 963.00 |
| மாணவர்களுக்கு இனிப்புகள் | 1080.00 |
| அந்தோணியார் கெபி ஒலி ஒளி | 1000.00 |
| மே மாத இறுதிநாள் சப்பரப்பவனி ஒலி ஒளி | 1000.00 |
| நியூஸ் பேப்பர் | 260.00 |
| நியான் லைட் (மீதித்தொகை) | 10000.00 |
| முதல் சனி விளம்பர தொடர்பு | 500.00 |
| ராஜேஸ் வீடியோ (தி.அறிவிப்பு போட்டோ, C.D & வீடியோ) | 10000.00 |
| மளிகை பொருட்கள் & கருப்பட்டி | 2222.00 |
| மீன் & சிக்கன் | 1130.00 |
| ரேசன் பொருட்கள் & காய்கறிகள் | 785.00 |
| பால் & தண்ணீர் | 1150.00 |
| பெட்ரோல் & டீசல் (வாகனம் & ஜெனரேட்டர்) | 4643.00 |
| உதவித் தொகைகள் | 450.00 |
| அருட்சகோ. பயணப்படி | 250.00 |
| பைக் ரிப்பேர் | 345.00 |

| | |
|---|---|
| செக் போஸ்ட் | 180.00 |
| மருந்துகள் | 1848.00 |
| ஸ்டேசனரி & பைல்கள் | 1348.00 |
| பதிலி தந்தையர் படி | 1050.00 |
| பங்குத்தந்தை திருப்பலிபடி | 1500.00 |
| புனித வரி | |
| திருப்பலி 329X5 = 1645.00 | |
| அடக்கம் 1X7 = 7.00 | |
| ஞானஸ்நானம் 1X5 = 5.00 | |
| = 1657.00 | |
| திருப்பலி 299X50 = 14950.00 | |
| | 16607.00 |
| மொத்தம் | 453892.00 |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.457691.00 |
| மொத்த செலவு | ரூ. 453892.00 |
| இறுதியிருப்பு | ரூ. 3799.00 |

| | |
|---|---|
| வங்கியில் | ரூ.3185.00 |
| கையில் | ரூ. 614.00 |
| மொத்தம் | ரூ. 3799.00 |

– **பங்குத்தந்தை**

**உலகப் புகழ் பெற்றவர்கள் :**


# மார்க்கோனி



கம்பியில்லாத தந்தியைக் கண்டறிந்து ரேடியோ ஒலி பரப்புக் வழியமைத்துக் கொடுத்த இவர் 1874- ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் பிறந்தவர். எந்தப் பள்ளியிலும் சேராமலே வீட்டிலேயே ஆசிரியர்களை கொண்டு படித்தார். வீட்டையே பரிசோதனைக் கூடமாக மாற்றிப் பல ஆராய்சிகளைச் செய்தார். 1894-ஆம் ஆண்டு மின்காந்த அலைகள் மூலம் சைகைகளை அனுப்பிக் காட்டினார். இத்தாலிய அரசு இவருக்கு ஊக்கம் தராததால் இங்கிலாந்தையடைந்து 1986-இல் கம்பியில்லாத தந்திக்கு காப்புரிமை பெற்றார். 1912-இல் ஒரு விபத்தில் வலது கண் போய் விட்டது. ஆயினும் அவர் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார். 1909-ஆம் ஆண்டு பௌதிகத் துறைக்கான நோபல் பரிசை பெற்றார். 1937-இல் காலமானார்.

- நன்றி. **உலகப் புகழ் பெற்றவர்கள்**

## மகாத்மா காந்தி...



உலகத்துக்கொரு புதுமையை அஹிம்சையைக் கையாண்டு ஒரு பெரிய நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த காந்தி 1869-ல் குஜராத் மாநிலம் போர்பந்தரில் பிறந்தவர். லண்டனில் சட்டம் படித்து தொழில் நிமித்தம் தென்னாப்பிரிக்கா சென்றவர். அங்கு இனவெறியை எதிர்த்து அஹம்சைப்போரை முதலில் தொடங்கினார். வெள்ளையர் அல்லாதவர்களுக்குப் பல உரிமைகளைப் பெற்றுத் தந்தார். இந்தியா திரும்பியதும் முழு மூச்சுடன் விடுதலைப் போரில் ஈடுபட்டார். நாடே ஒரு மனதாகத் தலைவராக ஏற்றுக் கொண்டது எவ்விதத் தியாகம் செய்வதற்கும் மக்களை அவரால் திரட்ட முடிந்தது. பல போராட்டங்களை நடத்தி சிறை சென்றவர். விரதம் இருந்தார். இந்து முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு போன்றவற்றிற்கு கடுயைாக உழைத்தார். இந்திய மக்களின் சுதந்திரப் போராட்டத்தை இனியும் அடக்கி வைக்க முடியாது என்ற நிலைமை உருவான போது பிரிட்டன் தானக வெளியேறி சுதந்திரம் அளிக்க முன் வந்தது. 1947 ஆகஸ்ட் 15-இல் நாடு விடுதலை பெற்றது. 1948 ஜனவரி 30-ம் தேதி மதவெறியன் குண்டுக்கு மகாத்மா இறையானாார்.

- நன்றி. **உலகப் புகழ் பெற்றவர்கள்**



# இதோ உம் தாய்

இறைவன் விரும்பிய வாழ்க்கையை விசுவாசித்து வாழ்ந்து வந்தவள் நம் அன்னை மரியாள்.

இவரே நம் தாய் என போற்றப்படுகின்றாள். நம் தாயின் திருப் பெயரை உலகமெங்கும் எல்லா திருத்தல கோயில்களிலும், நாம் முதலில சென்றவுடன் பார்ப்பது சிலுவை அடியில்பொறிக்கப்பட்ட வார்த்தை இதோ உம்தாய் என நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவால் நமக்கு அளிக்கப்பட்ட கொடையே, நம் திருக்கல்யாணத் தாய் என நாம் அறிவோம்.

அண்ணாள் சுவக்கீன் தம்பதியரின் அருந்தவர் புதல்வியாக பாமரப் பெண்ணாக பிறந்தவள் தான் நம் அன்னை மரியாள் தாவீது குலக்கன்னியாக பிறந்தவள். பாரெல்லாம் படைத்தாலும், கருத்தாங்கி, பரமன் தம் தூதர் மூலம் பரிசுத்த ஆவியால் உண்டாககப்பட்டார். (அருள் மிகப் பெற்றவரே! ஆண்டவ் உம்மோடு இருக்கின்றார். என வாழ்த்தி இறைவனின் தாயாக போற்றப்படுகின்றார். நம் திருக்கல்யாணத் தாய் அன்னை பல்வேறு பெயர்களிலும் அழைக்கப்பட்டாலும் கடவுளின் திருவுளத்தை ஏற்றுக் கொண்டு அவர் இதோ நான் அடிமை, உமது வார்த்யினை தாங்கி முதல் சிலுவைப் பாடுகள் வரை இறை மகன் இயேசுவோடு உடன் இருந்து வேதனையை தாங்கி மகிமையுள்ளார். எனவே தான் வியாகுலதாய் என அழைக்கபபடுகின்றாள்.

இயேசுவின் மீட்பு பணியில் மரியாளின் பங்கேற்பு மிகவும் அதிகமாக காணப்பட்டது. எனவே தான் தன்னை முழுமையாக இறைத்திட்டத்திறகு முற்றிலும் கையளித்தார். நம் அன்னை மரியாள் தன் வாழ்வில் அன்பையே மணி மகுடமாய் அணிந்து கொண்டவள். நம் அன்னையின் உறவினரான முதிர்ந்த வயது எலிசபேத்தம்மாள் கருவுற்றிருக்கும் போது அயீன் கரீம் என்ற மலைநாட்டிற்குச் சென்று மூன்று மாத காலமாக அவர்களுடன் தங்கி இருந்து உதவி செய்து வந்தார்கள். நம் அன்னையானவள் பிறருக்கு உதவிப் புரிவதில் தாராள குணம் உடையவள். கானாவூர் திருமண வீட்டில் திராட்சை ரசம் தீர்ந்து போனதை நினைத்து அவர் சொல்வதையெல்லாம் செய்யுங்கள் என்று சொல்லி அங்குள்ள குறைகளை போக்க தனது மகன் கடவுளின் மகன் என்பதை உணர்ந்து யேசுவிடம் நமக்காக பரிந்து இவ்வுலக மக்களுக்கு சொல்ல அன்பிலும் விசுவாச வாழ்விலும் சிறந்து விளங்குவது நம் அன்னையின் இலட்சியம் ஆகும்.

A. மரிய பாக்கியசீலி, சங்கரன் குடியிருப்பு

# புனித கன்னிமரியின் விண்ணேற்பு



கன்னிமரியாள் இறக்கும் நேரம் வந்தது. கடவுளின் விசேச வரத்தால் எல்லா அப்போஸ்தலர்களும் கூடினார்கள். அவள் இறந்ததும் சிறப்பாக அவளை அடக்கம் செய்தனர். தாமதமாக தோமையார் வந்தார். அன்னையின் முகத்தை எப்படியாவது பார்க்க வேண்டுமென்று வற்புறுத்தினார். ஏனைய சீடர்களும் அதை இன்னோறு தடவை பார்கக விரும்பினர். கல்லறையைத் திறந்து பார்த்தார்கள் அன்னையின் உடலை அங்கு காணோம். தம்மை இயேசுவும் மரியாளும் சாவு என்னும் வாயில் வழியாக மோட்சத்திற்குச் சென்றார்கள் மரியாளும் இயேசுவுடன் சிலுவையில் அறைபட்டாள் என்று சொல்லலாம் இயேசு பரலோகத்துக்குச் சென்ற பின் அவள் தேவசித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பூமியில் பொறுமையுடன் காத்திருந்தாள்.

இயேசு நன்றியுள்ளவர் தம் அன்னை தமக்கு பூமியில் செய்தவற்றை அவர் மறக்கவில்லை. மோட்சத்தில் அவளுக்கு தம் அருகில் ஓர் உயர்ந்த அரியணைக் கொடுத்திருக்கிறார் அங்கிருந்து அவள் நம் அனைவரையும் அன்புடன் நோக்குகிறாள். அவள் நமக்கு அடைக்கலம் ஆறுதல், நம்பிக்கை, மகிமை, ஆனந்தம், நமது அரசிபரகதியில் கடவுளது மகிமையைப் பார்ப்பது நமக்கு பேரானந்தமாய் இருக்கும். அதற்கு அடுத்தபடியான ஆனந்தம் அழகினை முழுமையான நம் அரசியைக் கண்டு மகிழ்வதே.

**சிந்தனை :** நாம் மோட்சம் செல்ல நடந்து வேண்டிய ஏணி மரியாளே. இந்த ஏணி வழியாகவே இயேசு இந்தப் பூமிக்கு வந்தார். மரியாள் வழியாகவே நாம் மோட்சம் செல்ல வேண்டும் என்பது கடவுளது விருப்பம். (புனித புல்ஜென்ஸியுஸ்)

**செபம் :** ஓ விண்ணரசியே! மண்ணுலகில் இருக்கும் உம் மக்களை மன்னித்து ஏற்றருளும்.

– தூயவர்களின் வரலாறு

# தேசிய கீதம்

ரவீந்திரநாத் தாகூர் வங்காள மொழியில் இயற்றிய ஜன கண மன பாடலின் ஹிந்தி வடிவம் நம் தேசிய கீதமாக ஜனவரி 24, 1950–ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேசிய கீதம் பாரத் விதாதா என்ற தலைப்பில் தாகூர் நடத்திய தத்வபோதினி பத்ரிகா என்ற பத்திரிக்கையில் 1912ல் வெளியானது

ஜண கண மன பாடல் முதல் முதலாக 1911–ம் ஆண்டு டிசம்பர்27–ல் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பாடப்பட்டுள்ளது. ஹிந்து பத்திகள் (13 வரிகள்) கொண்ட நம் தேசிய கீதத்தை 52 நொடிக்குள் பாட வேண்டும்.

முதல் கடைசி பத்திகளை மட்டும் கொண்ட தேசிய கீதத்தின் குறுகிய வடிவத்தை பாடுவதற்கான நேரம் 20 நொடிகள்

நம் தேசிய கீதத்தில் இரு நதிகள், இரு மலைகள், ஏழு மாநிலங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

– கையளவு களஞ்சியம்

# கருணை மழையே
# கல்யாணத் தாயே

**தாழ்ச்சியான ஜெபம் :**

லூக் 1-48 (தாழ் நின்ற தம் அடிமைதனை உயர்த்திவிட்டார்). இன்றைய மனிதன் பொருளுக்கும் சூழலுக்கும், பணத்திற்கும் மதுவுக்கும், மாதுவுக்கும் தற்பெருமைக்கும் பாவத்திற்கும் அடிமையாக இருக்கிறான். அன்னை மரியாள் ஆண்டவருக்கு அடிமையானாள்; அன்புக்கு அடிமையானார். தூய ஆவியால் நிரம்ப பெற்று தூய வாழ்வுக்கு அடிமையானர். தூய ஆவியால் நிரம்பப் பெற்று தூய வாழ்வுக்கு அடிமையானார். கடன்பட்டவர், கடன் கொடுத்தவனுக்கு அடிமை (நீ.மொ. 22-7) இல்லாதவன் இருப்பவனுக்கு அடிமை தாழ்ந்தவன் உயர்ந்தவனுக்கு அடிமை. படிக்காதவன் படித்தவனுக்கு அடிமை இப்படியாக சமுதாயத் தீமைகளான ஏகாதிபத்தியம் முதலாளித்துவம் போன்றவை உதாரணமாக உள்ளன.



ஆனால் அன்னை மரியாள் ஆண்வருக்கு மட்டுமே அடிமையானார் லூக் 1-38 இதோ ஆண்டவரின் அடிமை உம் வார்த்தையின் படி எனக்கு ஆகக் கடவது எனத் தாழ்பணித்தார். ஆண்டவருக்குள் இருப்பது என்பது அவருடைய கட்டளைக்கும் அன்பிற்கும் அவருடைய திருவுளத்திற்கு அடிமை என்பதாகும். அன்புக்கு அடிமை பண்புக்கு அடிமை, பக்திக்கு அடிமை, தாழ்ச்சிக்கு அடிமை, இரக்கத்திற்கு அடிமை, மற்றும் எல்லா நற்பண்புகளுக்கும் அடிமை என்பதை அன்னை மரியாள் நமக்கு உணர்த்துகிறார் . ஆண்டவருக்கு அடிமையாக இருக்கும். மனிதரின் வாழ்வு அவரின் ஆசீர்வாதம் நிறைந்ததாக இருக்கும். தாழ்ச்சியின் அன்னை நமக்குத் தரும் வழிகாட்டுதல் இது.

**பேறு பெற்றவர் :**

லூக் 1-48 பேறு பெற்றவர்கள் என்பதற்கு பாக்கியம் பெற்றவர்கள் என்றும் இறை ஆசீரைப் பெற்றவர். இரக்கம் பெற்றவர். இறைபராமரிப்பில் வாழ்பவர், அருள் நிரம்பப் பெற்றவர் என்றும் பொருள் கொள்ளலாம். தெய்வ நம்பிக்கை, பிறரன்பு, எளிய வாழ்வு வாழ்பவர்கள் பேறு பெற்றவர்களாவர் தி.பா. 1-1 அவர் தான் பேறுபெற்றோர் என விவிலியம் சொல்கின்றது. எனவே மரியா பேறு பெற்றவர். ஏனெனில் இறை வார்த்தையின் படி நடந்தார் கடவுளுக்கு அஞ்சி நடந்தார். மத் 5-1 (என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி உங்களைப் பற்றி இல்லாதவை, பொல்லாதவையெல்லாம் சொல்லும் போது நீங்கள்பேறு பெற்றோர் என்ற இறை வார்த்தையின் படி இயேசுவுக்காக துன்பங்களை அனுபவித்த அன்னை பேறு பெற்றவர்). நாம் எந்த மதத்தை சார்ந்தவர்களாக இருப்பினும் கடவுளின் நியமங்களுக்குப் பணிந்து அன்பு செய்து மனித நேய மிக்க வாழ்க்கை வாழும் போது நாமும் அன்னை மரியாளை முன் மாதிரியாகக் கொண்டு பேறு பெற்ற மக்களாக வாழ முடியும். இதுவே நாம் நம் அன்னைக்கு செலுத்தும் மாபெரும் வணக்கம்.

– அன்னையின் அடிமை



# குட்டீஸ் கார்னர்

ஹலோ குட்டீஸ், உங்க எல்லோருக்கும் இனிய சுதந்திர தின நல்வாழ்த்துக்கள். சுதந்திர தினத்தோடு நம் திருக்கலயாணத்தாயின் விண்ணேற்பு பெருவிழவையும் கொண்டாட இருக்கிறோம். சுதந்திர தினம் என்றாலே சாக்லேட் தான் நியாபகத்துக்கு வரும் அல்லவா! ஆமாம் நம் சுதந்திரமும் இனிப்புதான். சுதந்திர தினத்தில் நம் தேசிய கொடிக்கு மரியாதை செலுததி மகிழ மற்ந்திடாதீங்க!

ஓ.கே...ஸீயூ... குட்டீஸ்...

- அ.வினிஷா ஜெர்லின், திசை





ஹாய் குட்டீஸ்,

இங்கே இருக்கும் இந்த இரண்டு படத்திற்குமிடையே எத்தனை வித்தியாசங்கள் இருக்கிறது என்று இந்த தடவையும் சொல்ல மாட்டேன். உங்கள் திறமையை மதிப்பெண்ணிட்டு நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

7 வித்தியாசங்கள்............. 100

5 வித்தியாசங்களுக்கு மேல்......... 75


3 வித்தியாசங்களுக்கு மேல்......... 50

1 வித்தியாசங்கள்............. !!??




வேறென்ன?

ஃபெயிலுதான்....



பசியால் வாடிப்போயிருக்கும் இந்த குட்டி எலிக்கு சாப்பிடுவதற்கு உள்ளே உள்ள ஆப்பிளை எடுக்க வழி காட்டி உதவுவீர்களா......? குட்டீஸ்

ஹெல்த் கார்னர்





# வாழையின் நற்குணங்கள்

- வாழைப்பூ :

இதில் இரும்பு சத்து, போலிக் அமிலம், வைட்டிமின் ஏ, பி, சி சத்துக்கள் நிறைந்துள்ளன. இரத்தசோகையை வராமல் தடுத்து, உடம்புக்கு தெம்பையும் புத்துணர்வையும் தரும்.


- வாழைத்தண்டு :

இதில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் பி,சி நிறைந்துள்ளது.இரத்தத்தை சுத்தப்படுத்தும். இரத்தத்தில் உள்ள தேவையற்ற அசுத்த நீரை நீக்கும்.சிறுநீரகத்தின் செயலபாடுகளை சீராக்கி சிறுநீரக கல் அடைப்பை தடுக்கும்.

- வாழைக்காய் :

வாழைக்காய் மலச்சிக்கலை தீர்க்கும்.வைட்டமின் பி.சி சத்துக்கள் அதிகம் உள்ளது. வாயுவை தூண்டும் குணமுள்ளதால் இதை சமைக்கும் போது பூண்டு சேர்த்து கொள்வது நல்லது.

# மனித மூளை



மனித மூளையின் எடை 3 பவுண்ட் ஆகும். மனிதனது உயிர்பிரிந்த நிலையிலும் மூளை இறப்பதற்கு 4 முதல் 6 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளும். உடலிலிருந்து அதிகப்படியான இரத்தம் வெளியேறிய பிறகு 8 முதல் 10 நிமிடங்களுக்குள் உணர்வற்றுப்போகும் நிலை ஏற்படும்.தூக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கு வரும் போது நமது மூளை 10 முதல் 23 வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.நாம் நுகரும் ஆக்ஸிஜன் மற்றும் நமது உடலில் உள்ள இரத்தத்தில் 20% நமது மூளைக்குச் செல்கிறது.நமது மூளையில் உள்ள இரத்த நாளங்களின் நீளம் 100,000 மைல்களாகும்.நமது மூளையில் உள்ள நியூரான்களின் எண்ணிக்கை 100 பில்லியன் ஆகும்.குழந்தை முதல் முதியவர் வரை ஓரே எண்ணிக்கையிலான மூளை செல்களைப் பெற்றுள்ளனர். பிறந்த குழந்தையின் மூளை அக்குழந்தை ஒரு வயதை அடையும் போது மூன்று மடங்காக வளர்ச்சி அடைகிறது. நாம் ஒவ்வொறு முறை புதியதாக சிந்திக்கும் போதும் நமது மூளையில் புதிய நியுரான்கள் உருவாகின்றன.



# கிச்சன் கார்னர்

## இறால் பிரியாணி

**தேவையான பொருட்கள் :**

இறால் (உரித்தது) -300 கிராம், பாசுமதி அரிசி - இரண்டரைகப், பச்சைமிளகாய் -6,தக்காளி-6,சின்னவெங்காயம்-3/4 கப், புதினா, மல்லித்தழை-1 கைப்பிடி,இஞ்சி, பூண்டு, விழுது- 3டீஸ்பூன்,தேங்காய் பால்-2 கப், எலுமிச்சம்பழம்-1,எண்ணெய் -1/2கப்,நெய்-1/4 கப், உப்பு -2, டீஸ்பூன், மஞ்சள் தூள் -1/4,டீஸ்பூன்,பட்டை, ஏலக்காய்-1, லவங்கம்-5, பிரிஞ்சி இலை-சிறிது சோம்பு-1 டீஸ்பூன்

**செய்முறை :**




ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு பட்டை, சிலவங்கம், ஏலக்காய், பிரிஞ்சி இலை, சோம்பு எல்லாவற்றையும் ஒரு மணி நேரம் ஊற விடுங்கள். சின்ன வெங்காயம் பச்சை மிளகாயை அம்மியில் நசுக்கி வைத்துக் கொள்ளுங்கள். மிக்ஸியில் போடக்கூடாது). அம்மி இல்லாதவர்கள் பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளுங்கள். தக்காளியை மிக்ஸியில் அடித்து ஜீஸ் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒரு பாத்திரத்தில் எண்ணெய் விட்டு நன்றாக காய்ந்த பின், ஊற வைத்த தாளிக்கும் பொருட்களை தண்ணீரை வடிகட்டிவிட்டுப் போடுங்கள் நன்றாக பொரிந்த பிறகு நசுக்கிய வெங்காயம், புதினா, மல்லித்தழை போட்டு வதக்குங்கள். பிறகு நெய் விட்டு நன்றாக கிளறி விட்டு சுத்தம் செய்த இறாலைப் போட்டு, மஞ்சள் தூள் போட்டு நன்றாக கிளறி, இஞ்சி+பூண்டு விழுது சேர்த்து கிளறி 2 நிமிடம் மூடி வையுங்கள்

பிறகு தக்காளி ஜீஸ் தேங்காய்ப்பால் உப்பு சேர்த்து கொதிக்க வையுங்கள். நன்றாக கொதிக்கும் போது அரிசியைப் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு கிளறி தண்ணீர் வற்றிய பிறகு மட்டன் பிரியாணி பொலபொலவென சுவையாக இருக்கும்.

## அருள் குறையாத பொக்கிஷம்



திருக் கல்யாண தாய் மரியே
திருத்தலமாம் பொற்பை மாநகரில்
திருக்காவிரியாய் பொங்கி
திருவிழாவில் பெருகெடுத்து
திங்கள் தோறும் முதல் சனியில்
திவ்யமாய் பக்தருக்கருளி
தீமைகளை என்றும் அகற்றும்
திருக்கல்யாண மாமரி வாழ்க

T. சுகிர்தமணி அன்பரசன், கவரப்பேட்டை


# விவிலியத்தின் சிறப்பு

உலகில் மிகப்பெரிய திலுவிவிலியம் லாஸ் ஏஞ்சலில் உள்ளது. இதைத் தயாரித்தவர் லூயிஸ் வாஜ்மல்.

| | | |
|---|---|---|
| அந்த திருவிவிலியத்தின் அகலம் | - | 2 அடி 9 1/2 அங்குலம் |
| நீளம் | - | 4 அடி ½ அங்குலம் |
| மொத்தபக்கம் | - | 19438 |
| எடை | - | அரைடன் (500 கிலோ) |

இரப்பர் அச்சினால் கையாலே அச்சடிக்கப்பட்டது.

## நாம் பயன்படுத்தும் திருவிவிலித்தில் உள்ள சிறப்புகள்:



| | | |
|---|---|---|
| எழுத்துக்கள் | - | 3566480 |
| வார்த்தைகள் | - | 773698 |
| வாசகங்கள் | - | 31102 |
| பிரிவுகள் | - | 1189 |
| பெரிய அதிகாரம் | - | திருப்பாடல் 119 |
| சிறிய அதிகாரம் | - | திருப்பாடல் 117 |
| பெரிய வசனம் | - | தானியேல் 5: 23 |

திருமதி விஜி தனசேகர், தூத்துக்குடி

# ஒரு வரி உண்மைகள்

தட்டாரப்பூச்சி மட்டுமே நின்றவாறே பறக்கக்கூடியது.

உடலை விட நீளமான வால் கொண்ட குரங்கு.

யானையின் துதிக்கையில் எலும்பே கிடையாது.

மண்ணுளிப் பாம்புக்கு கண்கள் இல்லை.

வாத்து தூங்கியவாறே நீரில் நீந்தக் கூடியது.

ஒட்டகத்துக்கு நீந்தத் தெரியாது.

எமு என்னும் பறவை சாக பட்சிணி

சுவாசிக்காமல் வாழும் ஒரே உயிரினம் ஈஸ்ட்

கிளியின் மேல் அலகு கீல் போல் மடியக் கூடியது.

தேனீ ஈ இனத்தை சேர்ந்தது அல்ல, எறும்பு இனம்

பெண் குதிரைக்கு 36 பற்கள் ஆணுக்கு 40.

நான்கு முழங்கால்கள் கொண்டது யானை மட்டுமே

மீன்கள் சாகும் வரை வளர்ச்சியடையும்



## புனித வின்சென்ட் தே பவுல் சபை பொத்தகாலன்விளை

### மாணவ மாணவிகளுக்கு சீருடை, நோட்டு புத்தகம், வழங்கும் விழா

பொத்தகாலன்விளை பங்கு, புனித வின்செனட் - தே - பவுல் சபை உபகார அன்னை கிளைச்சபை சார்பாக பள்ளி மாணவர்களுக்கு உதவி வழங்கும் விழா 1.7.2013 அன்று காலை 10.00 மணி அளவில் பங்குத்தந்தை அருட்திரு. பபியான் ஜோசப் அடிகளார் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது அன்று எமது சபைகளிலிருந்து எழை மாணவ, மாணவர்களுக்கு சீருடைகளும், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டன இவ்விழாவில் அருட்சகோதரர் டேவிட் வளன் அவர்களும், புனித வளனார் பெண்கள் தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியை அருட்சகோதரி. மிக்கேல் அம்மாள் அவர்களும் புனித மரியன்னை ஆண்கள் துவக்கப்பள்ளியின் தலைமையாசிரியை திருமதி சாந்தா தேவி அவர்களும் மற்றும் முப்பள்ளியின் ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள் இவ்விழாவில் புனித மரியன்னை ஆண்கள் துவக்கப்பள்ளியில் பயிலும் 48 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டது. மேலும் புனித வளனார் பெண்கள் துவக்கப் பள்ளியில் பயிலும் 52 மாணவிகளுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 27 மாணவ, மாணவிகளுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. மேலும் 67 மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் எமது சபை மூத்த உறுப்பினர்கள் திரு. சிங்கராயன் திரு. பிரான்சிஸ் மற்றும் சபை உறுப்பினர்கள் திரு. பெலிக்ஸ் திரு. அருண் வினோத், திரு. ஜஸ்டின், ஈஸ்டர், திரு. ஜேம்ஸ், ஜெகதீஸ் வர்க்கீஸ், வளன், செல்வராஜா, பெனிட்டா, ஜெயந்தி, ஜெனிபா அந்தோணி மெர்ஸி, கிங்ஸ்லின் ஆகிய அனைவரும் கலந்து கொண்டார்கள். 7.7.2013 அன்று எம் சபைக் கூட்டத்தில் திரு. சூசை மரியான் அவர்களுக்கு வீட்டை சரி செய்ய உதவியாக ரூ. 4000 வழங்கப்பட்டது. மேலும் 10 சுவிகார குடும்பங்களுக்கு ரூ. 200ம், 5 படி அரிசியும் வழங்கப்பட்டன.

வரவு செலவு விபரம் (1-04-2012 முதல் 31-03-2013 வரை

| | |
|---|---|
| மொத்த வரவு | 150611.00 |
| மொத்த செலவு | 76761.00 |
| இருப்பு | 73850.00 |

## தெரிந்து கொள்ளுங்கள்...

★ பாலில் மேற்பரப்பில் ஆடையாகப் படிந்து விடுகிறது. அதனால் காற்று வெளியேற முடியாததால் பொங்குகிறது.

★ உலகிலுள்ள நாடுகளில் ஒவ்வொரு நாளும் இரவு பகல் நேரங்களில் அளவு ஒரே மாதிரி இருப்பதில்லை. மாறுபாடு உடையதாகவே இருக்கும். ஆனால் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் 21ந் தேதியிலும், செப்டம்பர் மாதம் 21ந் தேதியிலும் இரவு பகல் நேரம் சமமாகவே இருக்கும்.

★ பனிக்கட்டியை அப்படியே வைத்திருந்தால கரைந்து விடும். அத்துடன் உப்பைக் கொட்டி கலந்து வைத்தால் கரையாமல் இருக்கும்.

ஜெரின், பொற்பை

# தாயின் மடியில்



தாராளமாய் நான் விளையாடி
தழைத்திட திடல் அமைத்தல்
தாயே உன் மடியில் ...
பசிக்கு பாலும் அல்லும் பகலும்
பரிந்துறங்க இடமும் அளித்தாய்
தாயே உன் மடியில்...
அரவணைப்பு என்பதா? அன்பு என்பதா?
அதனை எண்ணி திளைத்து கிடக்கிறேன்
தாயே உன் மடியில்...
மரண வாயிலில் நின்ற பொழுதும்
மறக்க மாட்டேன்
தாயே உன் மடியில்...
இறைவியாய் நீ இருக்க
இனிமையாய் நானிருப்பேன்
தாயே உன் மடியில் ...
இது போன்ற பிறவி கிடைக்க
எத்துணை நாள் தவம் கிடந்தாய்
உன் தாயின் மடியில்...

A. ரோசினி சகாய டாப்னி, பொற்பை

## வாசகர் உள்ளம்

1. உலகத் திருச்சபை செய்திகள் உண்மையான பணிவாழ்வு பற்றியும் செபத்தை பற்றியும் திருத்தந்தையின் கருத்துக்களை அழகாக விளக்குகின்றது.

மெர்சி – நாகர்கோயில்

2. பங்குச் செய்திகள் நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி 12 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு அரசு தேர்வில் பெற்ற சிறந்த தேர்ச்சியைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன்.

மில்க்கா – கடகுளம்

3. தாயின் மடியில் அன்னையின் அன்பை விளக்கும் அருமையான கட்டுரை

ஆரோ அல்ஃபினா – தஞ்சை

4.கருணை மழையே கல்யாணத்தாயே கட்டுரை, நற்செய்தியோடு அன்னையின் இவ்வுலக பணிவாழ்வை இணைத்து அருமையாக சிற்றறிக்கின்றது.

செல்வகுமார் – மயிலாடுதுறை

5. பழுதற்ற கன்னியாயிருக்கிற மாதாவே அன்னையின் தேவன் வாழும் ஆலயமாக எவ்வாறு பயன்படுத்தினார் என்பதைக் காட்டுகிறது.

வில்சன் – சென்னை

6. கார்மெல் மலை தூய கன்னிமரி கட்டுரை கார்மெல் மலை அன்னைப்பற்றிய அருமையான செய்தி தொகுப்பு

ஜேம்ஸ் – தாம்பரம்

7. குறைகள் நீக்கி நிறைவைத்தருளும் திருக்கல்யாணத்தாய் மீட்புத்திட்டத்தில் அன்னையின் பங்கை அழகாக எடுத்துக் கூறுகிறது.

நிசாந்த் – பூச்சிக்காடு

# விண்ணேற்பு பெருநாள்



ஆகஸ்ட் 15 என்றாலே நாம் எல்லாருக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாகும்! ஆம்! அன்று நம் தாய் தூய கன்னி மரியாளின் விண்ணேற்பு பெருநாள்! நம் தாய் திருநாட்டின் விடுதலை திருநாள்

**கன்னிமரியின் விண்ணேற்பு :**

கன்னிமரியின் விண்ணேற்பு பற்றி திருவிவிலியத்தில் கூறப்படவில்லை எனினும் கன்னிமரியின் விண்ணேற்பு கன்னிமரியின் இறை தூய்மைக்கும், இறை தாய்மைக்கும் இறைவன் தந்த பரிசு! தம் மக்களை வழி நடத்திட , உலக மீட்பர் இயேசுவுக்கு இணையான மீட்பர் கன்னிமரியாள் என்று இறைவன் தேர்ந்து கொண்டதன் பலன் தான் கன்னிமரியின் விண்ணேற்பு இதனை ஆதாரபூர்வமாக உணர்ந்த நம் தாய் திருச்சபையும் கன்னிமரியாளுக்கு இணை மீட்பர் என்று பட்டம் அன்னை மரியாளை மகிமைபடுத்துகின்றது. கன்னிமரியின் இறை தூய்மை!

அன்றும் சரி! இன்றும் சரி! கன்னிப்பெண் கருவுறுவது என்பது சமுதாயத்தில் இழிவாக கருதப்படும் ஒன்று! ஆனால் இறைவனின் மீட்பு திட்டத்தில் அன்னை மரியாள், அமல உற்பவியாக பிறந்து கடவுளின் மகனான உலக மீட்பர் இயேசுவை பெற்றெடுக்கும் பேறு பெற்றார்கள். அன்னை மரியாள் தூய ஆவியால் இயேசுவை கருத்தாக்கினாலும் இயேசுவின் உடலும் மனித தன்மையும் அன்னை மரியாளுடையவை தான்! தூயவரை தாங்கிய அன்னை மரியாளின் தூய்மையான உடல் அழிவுறுவதை இறைவன் விரும்பவில்லை ஆகவே கன்னிமரிக்கு விண்ணுக்கும், மண்ணுக்கும் அரசியாக முடிசூட்டி, தன் மீட்பு திட்டத்தை அன்னை மரியாளின் வழியாக செயல்படுத்தி வருகிறார்.

**கன்னிமரியின் இறை தூய்மை :**

திருவிவிலியம் விவரிக்கும் மரியாள் எலிசபெத்தை சந்தித்து. சிறுவன் இயேசுவை காணாமல் தேடி எருசலேம் கோயிலில் கண்டது. கானாவூர் கல்யாணம், சீடர்களை வழி நடத்தியது போன்ற நிகழ்வுகள் அன்னை மரியாளின் இறை தாய்மையை சிறப்பாக எடுத்துரைக்கின்றன. இந்த இறை தாய்மையை மக்கள் அனைவரும் அனுபவிக்க வேண்டும். என்ற இறைத்திட்டத்தை கல்வாரி காட்சியின் போது அம்மா இதோ உன் மகன் (யோபு 19:26) என்ற உறவை ஏற்படுத்தி அன்னை மரியாளின் இறை தாய்மைக்கு மகுடம் சூட்டுகின்றார் நமதாண்டவர் இயேசு!

மரியே வாழ்க!

M.. மிக்கேல் உசா, பொற்பை

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1.ஆசேர் (2:36) 5. மனிதர் ( 3:6) 9. ஏபேர் (3:35) மூன்றரை (4:25) வலக்கை (6:16)

**வலமிருந்து இடம் :** திருப்பணி (2:37) கோதுமை (3:17) கடவுள் (3:38) அதிகாரம் (4:24) நிறைவு (6:21) ஞானம் (7:35)

**மேலிருந்து கீழ் :** போதகர்கள் (2:46) முப்பது (3:23) அருள் பொழிவு (4:18) மனம் மாற (5:32) பகைவரிடம் (6:21) பாறை மீது (8:6)

**கீழிலிருந்து மேல் :** ஏரோது (3:1) 8. அத்தி (3:28) 12. இறைவாக்கினர் (4:24) 16. ஓய்வு நாளும் (6:5) 20. கண்டனம் (6:37) யாயிர் (8:41)

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றிப் பெற்றவர்கள்

1. D. ஜோஸ்பின் மேரி, கவரப்பேட்டை
2. S. சுரேஸ் கீதா, கவரப்பேட்டை
3. S. டோமினிக் பெனிட்டா, கவரப்பேட்டை
4. A. அனுசா அகஸ்டின், கவரப்பேட்டை
5. A. அன்னபுஸ்பம் ராஜன், கவரப்பேட்டை
6. J. அனிதா ஜாண்சன், கவரப்பேட்டை
7. ஸ்டெல்லா பீற்றர், மாதர்பாக்கம்
8. S. நிர்மலா சந்தியாகுராஜன், மார்க்கம்பட்டி
9. A. மேரி சாலினி, பொற்பை
10. D. அந்தோணி ஏசுதாசன், பொற்பை
11. குயின் ரோஸ் பாக்கியம், பொற்பை
12. கபிரியேல் மேரி, பொற்பை
13. S. மேரி லீலா, பொற்பை
14. G. ரெஜினாள் மேரி, பொற்பை
15. S. ஜோஸ்லின், பொற்பை
16. . . சந்தணத் திரவியம், பொற்பை
17. . . சந்தணம் திரவியம், பொற்பை
18. J.சோபா, பொற்பை
19. X. ஜஸ்டின் சகாய ராஜா, பொற்பை
20. J. ஆன்சி மேஹ, பொற்பை
21. ராஜன் தெரஸ்லின், பொற்பை
22. J. நிகிதா சரன், பொற்பை
23. J.ஆன்றோ விட்லின், மணலி
24. A.டேவிட் தேவராஜன் வெள்ளக்கோவில் ,
25. A.கரோலின் சிறுமலர்,கொழுந்தட்டு
26. S.சகாய ஷாருகான், கொழுந்தட்டு
27. S.இவாஞ்சலின் சுஜிதா, கோட்டபட்டி
28. S.அபிஷா, பொள்ளாச்சி
29. S.அர்ச்சனா மேரி, விஜயமங்கலம்
30. P.மரிய தமிழ் செல்வி, மதுரை
31. S.ஜோஸ் பிரகாஷ், பொள்ளாச்சி
32. A.அருள் தெரஸ் சாலினி, மாமன்டூர்
33. J. சகாய சுதா டெய்ஸி, விருப்பாச்சி
34. J. அருள்மதி ஜெய்கர், உவரி
35. J. ஜேம்ஸி பிரைட்சன், உவரி

பொற்பை நகர் திருத்தலத்தில்
வீற்றிருக்கும் அன்னையே
பொற்பை நகர் திருத்தலத்தில்
பொங்கி வரும் காவிரியே
அள்ளக்குறையா பொக்கிசமே
அண்டினோர் வாழ்வும் பொக்கிசமே
மங்காப் புகழுடன் ஜொலித்திடும் - உன்
மகிமையைக் காண வேண்டும் கண் கோடி



D. ஜோஸ்பின் மேரிதாசன், காவரப்பேட்டை

# வாழ்வு தரும் வார்த்தைகள் – ஜீலை – 2013

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | புனித அல்போன்ஸ் லிகோரி | விப 40:16-21, 34-38; | மத் 13:47-53 |
| 2. | புனித வெர்செல்லி யுசேபியுஸ் | லேவி 23:1.4-11, 15-16.27.34b-37 | மத் 13:54-58 |
| 3. | | லேவி. 25:1.8-17; | மத் 14: 1-12 |
| 4. | ஆண்டின் ஞாயிறு | எண் 1:2;2:21-23; கொலோ 3:1-5, 9-11; | லூக் 12:13-21 |
| 5. | புனித மரியன்னை பேராலய அபிசேகம் | எண் 11:4b -15 | மத் 14: 13-21 |
| 6. | ஆண்டவரின் உருமாற்றம் | தானி 7: 9-10, 13-14; 2பேது 1: 16-19; | லூக் 9:28b-36 |
| 7. | புனித கஜேதான் | எண் 13: 1-2, 25 14: 1.26a - 29a. 34-35 | மத் 16: 13-23 |
| 8. | | எண் 20: 1-13 | மத் 16: 13-23 |
| 9. | புனித தெரசா பெனடிக்டா | இச 4:32-40; | மத் 16: 24-28 |
| 10. | புனித லாரன்ஸ் | 2 கொரி 9:6-10; | யோவா 12:24-26 |
| 11. | ஆண்டின் ஞாயிறு 19 | சா.ஞா 18:6-9; | எபி 11: 1-2, 8-19 லூக் 12: 31-48 |
| 12. | | இச 10: 12-22 | மத் 17: 22-27 |
| 13. | | இச 31: 1-8; | மத் 18: 15-20 |
| 14. | | இச 34: 1-12 | மத் 18: 1-5, 10. 12-14 |
| 15. | புனித கன்னிமரியின் வரவேற்பு | தி வெ 11: 19a; 12: 1-6a. 10ab; 1 கொரி 15:20-27; | லூக் 1:39-56 |
| 16. | புனித ஹங்கேரி ஸ்தேவான் | யோசு 24: 1-13; | மத் 19: 3-12 |
| 17. | | யோசு 24:14-29; | மத் 19: 13-15 |
| 18. | ஆண்டின் ஞாயிறு 20 | எரே 38: 4-6, 8-10; | எபி 12:1-4 லூக் 12: 49-53 |
| 19. | புனித யூட்ஸ் யோவான் | நீத 2: 11-19 | மத் 19: 16-22 |
| 20. | புனித பெர்னார்து | நீத 6 : 11 - 24a; | மத் 19: 23-30 |
| 21. | புனித பத்தாம் பத்திநாதர் | நீத 9:6-15 | மத் 20: 1-16 |
| 22. | அரசியான புனித கன்னிமரியா | நீத 11: 29-39a; | மத் 22: 1-14 |
| 23. | புனித லீமா ரோஸ் | ரூத் 1:1. 3-6. 14b- 16.22; | மத் 22:34-40 |
| 24. | புனித பர்த்தொலோமேயு திருத்தூதர் | திவெ 21:9b-14; | யோவா 1:45-51 |
| 25. | ஆண்டின் ஞாயிறு 21 | எசா 66: 18-21 | எபி 12: 5-7, 11-13 லூக் 13:22-30 |
| 26. | | 1 தெ1: 1-5, 8b-10; | மத் 23: 13-22 |
| 27. | புனித மோனிகா | 1 தெச2:1-8 | மத் 23: 23-26 |
| 28. | புனித அகஸ்டின் | 1 தெச 2:9-13 | மத் 23:27-32 |
| 29. | புனித திருமுழுக்கு யோவானின் தலை வெட்டுண்டது | 1 தெச 3:7-13 | மாற் 6:17-29 |
| 30. | | 1 தெச 4: 1-8; | மத் 25: 1-13 |
| 31. | | 1 தெச 4:9-11 | மத் 25: 14-30 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 5 | | | | | | | | | 2 |
| | 25 | | | | | 1 | | | 7 |
| | 13 | | | | 24 | | | 23 | |
| | | | | 18 | | | 26 | | |
| 11 | | ■ | ■ | 15 | 9 | | | | |
| | | | 14 | | | | | | 6 |
| | | 19 | | | | 21 | | | |
| | 12 | | | | | | | 22 | |
| | | | 20 | | | ■ | ■ | ■ | |
| ■ | 16 | 17 | | | 8 | | | | 4 10 |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி**

**லூக்கா : அதிகாரம் 8 முதல் 16 வரை**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.08.2013**

## இடமிருந்து வலம்

1. என்னிடமிருந்து ............................ வேளியேறியதை உணர்ந்தேன்
5 இயேசு தனித்திருப்பதற்காக எந்த ஊருக்கு சென்றார்?
9. உங்கள் எல்லாரிலும் சிறியவரே .................. ஆவார்
13. பாதளம் வரை தாழ்த்தபடும் நகர் எது?
17 உடலுக்கு விளக்கு எது?
21. உடைமைகளை விற்று என்ன செய்ய வேண்டும்?
25. கடவுளுக்கும் செல்வத்துக்கும் என்ன செய்ய முடியாது

## வலமிருந்து இடம்

2. மகளே உனது ................................ உன்னை நலமாக்கியது
6. இயேசுவைப் பின்பற்ற விரும்புவோர் எதைத் துறக்க வேண்டும்?
10. ................................... மிகுதி வேலையாட்களோ குறைவு
14. ஆண்டவரின் காலடியில் இருந்த பெண் யார்?
18. இரண்டு காசுக்கு எத்தனை சிட்டுக்குருவிகள் விற்கப்படும்?
22. மண்ணுலகில் .................................... உண்டாக்கவே வந்தேன்.
26. திருச்சட்டமும், இறைவாக்கும் யார் காலம் வரையில்

## மேலிருந்து கீழ்

3. அவளுடைய .................................. மலைத்துப் போயினர்
7. இவரே என் ..............................
11. வழியில் எவருக்கும் ........................... செலுத்த வேண்டாம்
15. நீங்க உங்கள் பிள்ளைகளுக்கு .......................... அளிக்க அறிந்திருக்கிறீர்களே
19. மிகுதியான உடைமைகளால் எது வந்து விடாது?
23. மேற்கில் மேகம் எழும்பினால் என்ன வரும்?

## கீழிருந்து மேல்

4. ஓர் ....................... போதும்
8. அவரிடம் ...................... கேட்க அஞ்சினார்கள்
12. கூலிக்கு உரிமை உடையவர் யார்?
16. யோனா எந்த நகர மக்களுக்கு அடையாளமாக இருந்தார்
20. உணவை விட மேலானது எது?
24. ........................ மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம்.

## திருத்தல வழிபாடுகள்

- ★ ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு செபமாலை , 10.15 மணி முதல் 11.30 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு அதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறும். மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணிக்கு நவ நாள் திருப்பலியும் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- ★ மாதத்தில் முதல்செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலை திருப்பலி.
- ★ மாதத்தில் முதல் புதன் ஆலய கெபியில் மாலை திருப்பலி.
- ★ மாதத்தில் இரண்டாவது புதன் நான்கு சந்தி கெபியில் மாலை திருப்பலி.
- ★ மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்.
- ★ மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.
- ★ மாதத்தின் முதல் சனி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

## இணையூர் வழிபாடுகள்

**நவமுதலூர்**

- ★ வாரம் ஒருமுறை ஞாயிறு திருப்பலி மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலி நடைபெறுகிறது.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி நற்கருணை ஆசீர் |

## அடுத்த இதழ்

வேளாங்கன்னியில் கோயில் கொண்டுள்ள ஆரோக்கிய அன்னை மற்றும் நமது அன்னையைப் பற்றியும் சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது. உங்களுடைய வாழ்வில் அன்னை புரிந்த அற்புதங்கள் அதிசயங்கள் மேலும் அன்னையைப் பற்றிய கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் எங்களை வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15-08-2013

**சேர வேண்டிய கடைசி நாள் : 15.08.2013**

**சந்தாதாரராக ஆகுங்கள் !** **அன்னையின் அருள் பெறுங்கள் !**